பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 07 சனிக்கிழமை 21.01.2023 கதிர் 74

இனிது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபை பற்றிய தகவல்தான் இன்றைக்கும். வடக்கு மாகாண சபைக்குப் பின்னர் யாழ். மாநகர சபையிதான் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போல சுவாரஸியமான தகவல்களைத் தந்து கொண்டே இருக்கின்றது 2

## ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காக ஆதரவு வழங்க வேண்டும் இந்தியா!

### ஜெயசங்கரிடம் சஜித் வலியுறுத்து



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இன்று சந்தித்தார்.

இதன்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப் பட்ட துடன், இலங்கையின் ஒட்டுமொத்த 2

## கோர விபத்தில் 7 பேர் சாவு 47 பேர் வைத்தியசாலையில்

### நானுஓயாவில் சோகம்



நுவரெலியா மாவட்டம், நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியின் சமர் செட் பகுதியில் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் நேற்று மாலை நேருக்கு நேர் மோதி விபத்துள்ளானது. இதில் வானில் பயணித்த 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 2

# காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் நடவடிக்கை தொடக்கம்

## திடீரென நேற்று சம்பந்தனைச் சந்தித்து ரணில் தெரிவிப்பு



அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ளபடி காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கொழும்புக்கு வந்து திரும்பியதை அடுத்து அவசர அவசரமாகத் தமிழ்த் தலைவர்களைச் சந்தித்த ஜனாதிபதி நேற்று இதனைத் தெரிவித்தார்.

“தேசிய காணி ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைவு தயாராகி வருகின்றது. அது நிறைவடைந்தவுடன் காணி அதிகாரங்களை மாகணங்களுக்கு வழங்கப்படும். 10



## புதிய வரி விதிப்பை எதிர்த்து நிதி அமைச்சு முன் போராட்டம்

அரசின் புதிய வரி விதிப்புக் கொள்கையை எதிர்த்து நிதி அமைச்சின் முன்பாக நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தகமைசார் பணியாளர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இதில் பங்கெடுத்தது.

வரி விதிப்புக் கொள்கைகான தமது எதிர்ப்பை மட்டுமன்றி வேறு பல விடயங்கள் தொடர்பில் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் 2

## பிரான்ஸ் நாட்டில் 14 இலங்கையருக்கு சிறைத் தண்டனை

### ஐரோப்பாவுக்கு ஆள்களைக் கடத்திய குற்றத்துக்காக

ஐரோப்பிய நாடுகளுக்கு ஆள்கடத்தலில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட 14 இலங்கையர்களுக்கு பிரான்ஸ் நாட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

முதன்மைக் குற்றவாளிக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தலைநகர் பாரிஸிலிருந்து 80 கிலோ மீற்றர்கள் தள்ளியுள்ள சிறிய கிராமத்தில் பலசரக்குக் கடை ஒன்றை நடத்தி வந்தவரே முதன்மையான குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது.

இலங்கை மற்றும் பங்களாதேஷிலிருந்து ஆட்களைக் கடத்துவதற்கான பாதை மற்றும் பணத்தை இவரே 2

## தாமதிக்காது தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் பங்களிப்பு அவசியம்

### கொழும்பில் ஜெய்சங்கரிடம் தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்து

அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

வழங்கப்படும் உறுதிமொழிகளை ஆட்சியாளர்கள் அமுல்படுத்துவது இல்லை.

எனவே, இனியும் தாமதிக்காது, தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், இந்தியாவிடம் இன்று கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர். 2

## மின் கட்டண ஏற்றத்துக்கு ஆணைக்குழு இணக்கம்

அரசு அறிவித்துள்ள மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது. அரசின் முடிவை நடைமுறைப் படுத்த அனுமதிக்க முடியாது என்று சொல்லிவந்த ஆணைக் குழுவின் 5 உறுப்பினர்களில் மூவர் அமைச்சரவை முடிவை ஏற்றுக்கொண்டதை அடுத்து மின்சாரக் கட்டணங்கள் அதிகரிப்பதற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பின்னரே அந்த மூன்று உறுப்பினர்களும் தமது முடிவை தலைகீழாக மாற்றிக்கொண்டனர் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவேளை மாகாண சபை உறுப்பின ராக இருந்த ஆனோல்ட் நகர சபையிலும் இருப்பதால்தான் அப்படியோ என்னவோ!

புதிய தகவல் நேற்றிரவு பரபரப்பைக் கிளப்பியது. ஆனோல்டை புதிய முதல்வ ராகப் பிரகடனப்படுத்தி வடக்கு ஆளுநர் வர்த்தமானி அறிவித்தலை விடுத்தி ருக்கிறார் என்பதுதான் அந்தச் செய்தி.

மாநகர சபை முதல்வரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்து அதில் ஆனோல்ட் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவதற்கான ஏதுநிலை இருந்த சமயத்தில், சபையில் நிறைவெண் (கோரம்) போதாது என்று தெரிவித்து கூட்டத்தை ஒத்தி வைத்திருந்தார் உள் ளூராட்சி உதவி ஆணையாளர். கூட்டம் தொடங்கும்போது நிறைவெண் இருந்த நிலையிலும் முதல்வர் தெரிவுக்கான வேட்பாளர் பெயர் முன்மொழியப்பட்ட பின்னரே நான்கு உறுப்பினர்கள் கூட்டத்தி லிருந்து வெளியேறிச் சென்றார்கள் என் கிற நிலையிலும் கூட்டத்தில் இருந்த எந்தவொரு உறுப்பினரும் நிறைவெண் பற்றிச் சுட்டிக்காட்டாத நிலையிலும் முதல்வர் தெரிவைத் தொடர முடியாது என்று உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் அடம்பிடித்தார்.

இது சட்டச் சிக்கலுக்குரிய விவகாரம் ஆனாலும் சட்ட நடவடிக்கைகளுக்கு போனால் முதல்வர் தெரிவு மேலும் தாமத மாகிப் போகுமோ என்கிற அச்சம் காரண மாக தமிழ் அரசுக் கட்சி அந்த நகர்வுக்குப் போகாது என்று நேற்றுத் தெரிவித்தி ருந்தேன். ஆனாலும் தமது எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக சபையின் 20 உறுப்பினர்கள் தமது ஆட்சேபனையை எழுத்து மூலம் கொடுத்திருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

சபை கலைக்கப்படும் குறுகிய காலம் வரையாவது ஆனோல்ட் மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு இப்படி அநியாய மாகத் தட்டிப் பறிக்கப்பட்டது குறித்து ஆளுநருக்கு சில தரப்புக்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. இந்த விவகாரத்தை அவர் தலையிட்டு நேர்சீர்ப்படுத்த முடியும் என்றும் வழிப்படுத்தியிருக்கின்றன. அதையடுத்து அவர் ஆனோல்டை யாழ். மாநகர சபையின் புதிய முதல்வராக அறிவித்து வர்த்தமானி அறிவித்தலை விடுக்கப் பணித்தார் என்று ஒரு கதை நள்ளிரவுவரை உலாவியது.

நள்ளிரவில் அது தொடர்பான வர்த்த மானி அறிவித்தல் வரும் என்று எதி ர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படியெதுவும் வரவில்லை. ஒருவேளை இன்று காலை யில் வரக்கூடும் என்கிற எதிர்பார்ப்பும் இருக்கின்றது.

நிறைவெண் இருப்பதாக அறிவித்து முதல்வர் தெரிவுக்கான பெயரும் பிரேரிக்கப்பட்ட பின்னர் நிறைவெண் இல்லை என்று தெரிவித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் முடிவு சரியான தல்ல என்று ஆளுநரும் ஆழமாக நம்புகின்றார் என்று தெரிவிக்கப்படுகின் றது. அதனால் அவர் இந்த விடயத்தில் தலையிடுவார் என்கிற எதிர்பார்ப்பின் காரணமாகவும் வர்த்தமானி அறிவித்தல் பற்றிய கதைகள் உலாவி இருக்கலாம்.

எதுஎப்படியிருந்தாலும் அத்தகைய ஒரு வர்த்தமானி அறிவித்தல் வந்தால் அதனைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்துவ தற்கான தயார்ப்படுத்தல்களும் நேற்று நள்ளிரவிலேயே தொடங்கிவிட்டன. அப்படியொரு வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தால் அதற்கெதிராக நீதிமன் றத்தை நாடுவதற்கு இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூடிப் பேசியிருக்கிறார்கள்.

ஒரு சிறு நகரத்தை நிர்வகிப்பதற்கே எவ்வளவு பெரிய அக்கப்போர் பாருங்கள். இந்த லட்சணத்தில்தான் மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களையும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். எல்லாம் எங்க போய் முடியுமோ....!

**இடிமின்னல்**

## கோர விபத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹட்டன் டிக்கோயா பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற வான் ஒன்றை கொழும்பிலிருந்து பாடசாலை மாணவர்களை சுற்றுலாவுக்கு ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று மோதியதிலேயே இந்தமோசமானவிபத்துஇடம்பெற்றுள்ளது.

இதில் பஸ்ஸில் பயணித்த 47 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பஸ் சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது என்றும், இருள் காரணம ாக மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது என்றும் நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## ஒட்டுமொத்த ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் நலனுக்காக இந்திய அரசின் தொடர்ச்சியான ஆதரவை நல்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால இரு தரப்பு உறவுகள் மற் றும் நட்புறவின் பேணலை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலை வர், இது நாளுக்கு நாள் வலுப்பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேவும் கலந்துகொண்டார்.

## தாமதிக்காது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக் கும், தமிழ்த் தேசியக் கட்சிக ளின் தலை வர்களுக்கும் இடையிலான சந்திப்பு, கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் இன்று நடை பெற்றது.

நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை அரை மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேச்சில், அரசமைப் பின் 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபைத் தேர்தல், அரசியல் தீர்வுத் திட்டம் மற்றும் காணி விவகாரம் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, தீர்வுத் திட்டம் சம்பந்தம ாக இலங்கை அர சுடன் நடத்தப்படும் பேச்சுகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்களில் உத் தரவாதம் வழங் கப்பட்டாலும், அவை நிறைவேற்றப்படு வதில்லை. எனவே, விரைவில் தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திர மான பங்க ளிப்பு அவசியம் -என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் கள் எடுத்துரைத்தனர்.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்,

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்து ம ாறு ஜனாதிபதியிடம் இன்று காலை வலியுறுத்தினேன். கூட்டுச் செய்தியாளர் சந்திப்பிலும் பகிரங்கமாக அறி வித்தேன்.13 ஐ முழுமையாக அமுலாக்க இந்தியா தொடர்ந்து அழுத் தம் கொடுக்கும் என்று குறிப்பிட்டார்.

13 ஐ ஏற்றால், ஒற்றை யாட்சியை ஏற்றதாகிவிடும் என இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் எம்.பி. குறிப்பிட்டார்.

இருப்பதை அமுல்படுத்தாவிட்டால், அதுவும் இல்லாமல்போகலாம். எனவே, இடைக்காலத் தீர்வாகவேனும் அதை ஏற்க வேண்டும். தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப் பது மட்டும் தீர்வு அல்ல - என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

தெற்கின் நிலை தற்போது மாறியுள்ளது. அவர்களுடன் நாங்கள் பேசலாம். அவர்களின் மனநிலையை யும் நாங்கள் மாற்றலாம் - என்று கஜேந்திர குமார் எம்.பி. குறிப்பிட்டார். கஜேந்திரகுமார் எம்.பியின் இந்தக் கருத்துக்குச் சுமந்திரன் எம்.பியும் இணங்கினார். எனினும், இருக்கின்ற அதிகாரங்களை நாங்கள் உடனே பெற வேண்டும் என்று சுமந்தி ரன் எம்.பி. வலியுறுத்தினார்.

இலங்கையின் தெற்கு மக் களுடன் கலந்துரையாடும் பணியை ஒரு நாடு என்ற வகையில் இந்தியாவால் மேற் கொள்ள முடியாது. அதனை நீங் கள்தான் மேற்கொள்ள வேண்டும் - என்று தமிழ்த் தலைவர்களிடம், இந் திய வெளிவிவகார அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி., கூட்டமைப்பின் பேச்சா ளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதி ராஜா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., தமிழ்த் தேசிய முன்ன ணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா ஆகியோர் பங் கேற்றனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. தேர்தல் பணி காரணமாக இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## மின் கட்டண ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஆணைக்குவின் தலைவர் ஜானக்க ரட்ணாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

ஜனவரி 12ஆம் திகதி நடந்த ஆணைக் குழு பணிப்பாளர்கள் கூட்டத்தில் அமை ச்சரவை முடிவை நடைமுறைப்படுத்த அனுமதிப்பதில்லை என்கிற முடிவு எடுக்கப்பட்டது. ஒரு வாரம் கழித்து 19ஆம் திகதி தேசிய பேரவையில் (நனல் கவுன்ஸில்) இது குறித்துப் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

தேசிய பேரவைக் கூட்டத்திற்கு முன்பாக எனக்குத் தெரியாமல் ஆணைக் குழுவின் மூன்று உறுப்பினர்களை அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பேசியுள்ளார். அதை அடுத்து பேரவைக் கூட்டத்தில் அந்த மூவரும் தமது முன்னைய முடிவை மாற்றி மின் கட்டணத்தை அதிகரிக்கும் அரசின் முடிவுக்கு இணங்கினர்.

12ஆம் திகதி நடந்த கூட்டத்தில் அமை ச்சரவை முடிவு குறித்து முழுமையான விவரங்கள் தமக்குக் கிடைக்காத காரணத்தாலேயே எனது முடிவோடு தாங்கள் ஒத்துப்போனார்கள் என்று அவர்கள் அங்கு காரணம் தெரிவித்தனர். உண்மையில் அதுதான் காரணம் என்றால் அதன் பின்னர் இருந்த ஒரு வார காலத்திற்குள் அவர்கள் அது பற்றி எனக்கு அறிவித்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யாமல் திடீரென பேரவைக் கூட்டத்திலேயே தமது முடிவை மாற் றிக்கொண்டார்கள்.

ஒரு சுயாதீன ஆணைக்குழுவின் முடிவை இப்படி யாராவது திடீரென மாற்றிக்கொள்வார்களானால் நாம் அதோகதிதான். தனிப்பட்ட முறையில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன் - என்றார் ஜனாக்க.

அடுத்த வாரம் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் கூட்டம் நடக்கவுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

## பிரான்ஸ் நாட்டில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்து வந்தார் என்று அதி காரிகள் கூறுகின்றனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததன் மூலம் உக்ரேன் ஊடாக ஐரோப்பாவிற்குள் இவர் ஆட்களைக் கடத்தி வந்துள்ளார்.

லண்டனைத் தளமாகக் கொண்ட மற்றொரு குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு சிறிய அளவிலான சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## புதிய வரி........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாக அதில் கல்நதுகொண்டவர்கள் தெரிவித் தனர்.

அரசின் வரிக் கொள்கையை எதிர்த்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் கறுப்பு ஆர்ப்பாட்ட வாரம் தமது அமைப்பால் முன்னெடுக்கப்படும் என்று அரச மருத் துவ அதிகாரிகள் சங்கச் செயலாளர் மருத்துவர் ஹரித்த அழுத்கே தெரிவித்தார்.

**தொழில் நுட்ப தடங்கல் காரணமாக பிரதி சனிக்கிழமை களில் வெளிவரும் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் “உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்” நாளை ஞாயிற்றுக்கிழமை பிரசுரமாகும் என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.**

**(ஆ - ர்)**

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622



# தலாய்லாமாவை அழைப்பதற்கு சீனா கடும் எதிர்ப்பு

திபெத்தின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமா இலங்கை வருவதற்கு சீனா கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. கொழும்பிலுள்ள சீனத் தூதரக அதிகாரி ஒருவர் மல்வத்தை பீடாதிபதிர் ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை மரியாதை நிமித்தம் கண்டியில் சந்தித்து தலாய் லாமாவை வெளிநாடொன்று வரவேற்பதை வன்மையாக எதிர்ப்பதாகத் தெரிவித்தார்.

பிக்குகள் குழு ஒன்று அண்மையில் தலாய் லாமா இலங்கைக்கு வருகை தரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தனர். டிசம்பர் 27 இல் இந்தியாவின் புத்தகயாவில் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். அதற்கு உத்தியோகபூர்வ பதில் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

"தலாய் லாமா ஒரு சாதாரண பௌத்த துறவி அல்லர். அவர் ஒரு மதத் தலைவர் என்ற போர்வையில் அரசியல் அஞ்சாத வாசம் செய்யும் நபர். 1951ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்களை அடிமைகளாக ஆண்ட அரசின் தலைவர்" என்று சீனத் தூதரக அதிகாரி ஹ வெய் தெரிவித்துள்ளார்.

தலாய்லாமா சீனாவுக்கு எதிராக திபேத்தில் பிரிவினைவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றார் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார். இவரது இலங்கை வரவை பௌத்த மக்கள் எதிர்க்க வேண்டும் சீன உறவை பாதிக்க அனுமதிக்க கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாட்டு உறவுகள் பாதிக்கப்படக்கூடாது என்று இந்தச் சந்திப்பின்போது மல்வத்தை பீடாதிபதி தெரிவித்துள்ளார். இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு சீனாவின் பங்களிப்பு முக்கியமானது என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.



# இந்தியாவின் உணர்வுப்பூர்வமான ஒத்துழைப்புகள் எமக்கு வேண்டும்!

## வெளியுறவு அமைச்சரிடம் டக்ளஸ் வேண்டுகோள்

இலங்கையின் கடல் வளத்துக்கும், இலங்கை கடற்றொழிலாளர்களுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள, இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறுவதற்கும், இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதாரசவால்கள்உட்படஅனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கும் இந்தியாவின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கருக்கும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ்க்கும் இடையிலான சந்திப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.

இதன்போதே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு போலி முகவர் நிறுவனம் மாரவிலவில் முற்றுகை!

## உரிமையாளர் உட்பட இருவர் கைது

மாரவிலவில் சட்டபூர்வ அனுமதியின்றி இயங்கி வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்று சுற்றிவளைக் கப்பட்டு உரிமையாளர் உட்பட இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் இவர்கள் மாரவில நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ருமேனியாவில் வேலை வழங்குவதாகக் கூறி நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிப்பவர் களிடமிருந்து இந்த நிறுவனம் பணம் வசூலித்துள்ளதாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிறப்பு புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் அந்த நிறுவனத்தை சோதனை செய்து அதன் உரிமையாளரைக் கைது செய்துள்ளனர் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

சோதனையின்போது, அந்த நிறுவனத்தில் 38 வெளிநாட்டு கடவுச்சீட்டுகள், 30 ஆயிரம் ரூபா பணம் மற் றும் பல ஆவணங்கள் கைப்பற்றப் பட்டன.

# தேர்தல்ஆணைக்குழுஉறுப்பினர்களின் வீடுகளுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பி னர்களின் வீடுகளுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தி யோகத்தர்கள் பாது காப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ள னர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இன்று ஊடகங் களிடம் தெரிவித்துள்ளார். முன்னதாக, தேர்தல்கள் ஆணைக் குழுவின் இரண்டு உறுப்பினர்களுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இரு வருக்குத் தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது என்று கடவத்தை பொலிஸ் நிலையத்திலும் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு முறைப் பாடுகள் கிடைத் துள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களான கே.பி. பி. பத்திரன மற்றும் எஸ்.பி. திவாரத்ன ஆகியோர் ஆணைக்குழுவில் இருந்து விலகா விட்டால் கொலை செய்யப் போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.




# ஏ.எல். பரீட்சை அட்டைகள் தபாலில் அனுப்பி வைப்பு

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் அதனை பதிவிறக்கம் செய்வதற் கான வசதி ஏற்படுத்தப்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தரவுத்தளத்திற்குள் பிரவேசித்து, பாடசாலை பரீட்சாத்திகளுக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் பரீட்சார்த்திகள் தமது அடையாள அட்டை மற்றும் தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்தி அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்ய முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்ய முடியாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2022 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தமிழரின் எதிர்காலம்!

இரண்டு நாள் பயணமாக கொழும்பு வந்து திரும்பிய இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பகிரங்கமாக, அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் வைத்துக்கொண்டு தெரிவித்திருக்கின்றார். அத்தோடு மாகாண சபைத் தேர்தலையும் முடிந்த விரைவில் நடத்தவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இந்தியாவை அதிகம் சார்ந்திருக்கவேண்டிய தேவை கொழும்புக்கு இருக்கின்றது. அதனால் புதுடில்லி கொஞ்சம் பெரியண்ணன் தோரணையில் காரியமாற்றுவதற்கான வெளிகள் கிடைத்திருக்கின்றன. அதனையே நேற்றைய காட்சிகள் வெளிப்படுத்தின. சிங்களத் தரப்புக்கு மட்டுமன்றி தமிழர் தரப்பிடமும்கூட அதே தோரணையையே இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் வெளிப்படுத்திச் சென்றிருக்கின்றார்.

இந்திய அமைச்சருடனான சந்திப்பில், 13ஐ ஏற்றுக்கொண்டால் ஒற்றையாட்சியை அங்கீகரித்தது மாதிரியாகிவிடும் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தபோது, இருப்பதை அமுல்படுத்தாவிட்டால், அதுவும் இல்லாமல்போகலாம். எனவே, இடைக்காலத் தீர்வாகவேனும் அதை ஏற்கவேண்டும். தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது மட்டும் தீர்வு அல்ல என்று பதிலளித்திருக்கிறார் ஜெய்சங்கர்.

ஆக மொத்தத்தில் தொடர்ந்தும் பேசிக்கொண்டிராமல் குறைந்தபட்சம் 13 ஐயாவது நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள் என்கிற நிலைப்பாட்டையே புதுடில்லி எடுத்திருக்கிறது. 13க்கும் அப்பால் சென்ற தீர்வு பற்றிக்கூட இந்திய அமைச்சர் கருத்து எதனையும் குறிப்பிடவில்லை என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த நிலைப்பாடு சிங்களவர்கள் பக்கத்திற்குச் சாதகமான நகர்வுதான். ஆனால் 30 வருடங்களுக்கு முன்னர் தாங்கள் அடியோடு நிராகரித்த ஒன்றை இப்போது இடைக்காலத் தீர்வாகவேனும் ஏற்கவேண்டிய தமிழ்த் தலைமைகளின் நிலைமைதான் பரிதாபத்துக்குரியது.

இடைக்காலத் தீர்வையே பெற வழியற்றிருக்கும் நிலையில் அதிலிருந்து நிரந்தரத் தீர்வை நோக்கிச் செல்வதற்கான திட்டமும் வழிவரைபடமும் தமிழ்த் தரப்பிடம் இருப்பதற்கான சாத்தியங்கள் எதுவுமில்லை. அரைகுறைத் தீர்வை ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்று சவால் விடுத்த வந்த தமிழ்த் தலைமைகள் 13இலிருந்து எப்படி இணைப்பாட்சி (சமஷ்டி) நோக்கி நகரப் போகின்றார்கள் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். மக்களை அதற்குத் தயார்ப்படுத்தவும் வேண்டும். இல்லையேல் 13 உடனேயே தீர்வு முடங்கிப் போய்விடும் அபாயம் உண்டு.

# சுதந்திரமே இல்லாத நாட்டில் எதற்காக கோடி ரூபா செலவிட்டு சுதந்திர தினம்?

## விமல் ரத்நாயக்க கேள்வி




நாட்டில் எதற்காக கோடிக் கணக்கில் செலவழித்து சுதந்திர தினம் கொண்டாடவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் நாட்டில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களை விரட்டுவதற்கு, ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட பல இளைஞர்கள், யுவதிகள் தற்போதும் சிறையில் வாடுகின்றார்கள். அவ்வாறான நிலையில் சுதந்திர தினம் தேவைதானா?

விடுதலையைக் கொடுங்கள். அதன் பிறகு நீங்கள் சுதந்திரத்திர தினத்தைக் கொண்டாடலாம். அதேவேளை, உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் அடிப்படையில் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும்.

கடந்த வருடம் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்ட சபைகளுக்கான தேர்தல் கட்டாயமாக மார்ச் 20 இற்கு முன்னர் நடத்தப்பட வேண்டும்.

75 ஆவது சுதந்திர தினத்துக்கு கோடிக்கணக்கான பணத்தை செலவழிக்க இருக்கின்றனர்.

அதே போல யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ரணில் விக்கிரமசிங்க கோடிக் கணக்கில் பணத்தை செலவழித்திருக்கின்றார்.

ஆனால் தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை எனக் கூறுவது வேடிக்கையான விடயமாகும்.

இந்தியாவிலிருந்து கோடிக்கணக்கில் கடன் பெற்றுள்ளார்கள். அதேபோல் பொலிஸாருக்கு வாகனங்களைப் பெற்றிருக்கின்றார்கள். இதற்கெல்லாம் எங்கே கணக்கு காட்டப்பட்டுள்ளது.

இந்த நிதியெல்லாம் எங்கே கொண்டு செல்லப்படுகின்றது? என்பது எமக்கு சந்தேகமாக உள்ளது. பொலீசாருக்கு நவீன ரக வாகனம் தற்போது தேவைதானா?


ஒரு நாட்டில் ஒரு தேர்தலை நடத்தி ஜனநாயக முறைப்படி மக்கள் ஒரு புதிய ஆட்சி முறையை உருவாக்குவது மக்களுக்குள்ள ஜனநாயக உரிமை.

அதனை இந்த அரசாங்கம் பிற்போடுமாக இருந்தால் தோல்வியடைந்த அரசாகவே நாங்கள் கருத வேண்டி வரும்.

குறிப்பாக 100 கோடி ரூபா நிதியை பெறுவதற்கு அரசாங்கத்துக்கு இயலாமையாக இருந்தால், இந்த அரசாங்கம் ஒரு தோற்ற அரசாகவே நாங்கள் கருத வேண்டி வரும்.

ஆனால் மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை பின்போடுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. - எனத் தெரிவித்துள்ளார்.

# ரணிலின் சாதனையை முறியடித்தார் ஜீவன்!



ரணில் விக்கிரமசிங்க, 1977ஆம் ஆண்டு தனது 29 ஆவதுவயதில் இலங்கையின் இளம் அமைச்சரவை அமைச்சராகப் பதவியேற்றமையே சாதனையாக இருந்தது. இந்தநிலையில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராக ஜீவன் தொண்டமான் வியாழக்கிழமை நியமிக்கப்பட்டார். ஜீவன் தொண்டமான் தனது 28 ஆவது வயதில் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து, இலங்கையின் இளம் அமைச்சரவை அமைச்சராக வரலாற்றை மாற்றி எழுதியுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமான், இலங்கையில் அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள இளம் அரசியல்வாதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வச மிருந்த சாதனையை ஜீவன் தொண்டமான் முறியடித்துள்ளார்.

# தேர்தல் முறைப்பாடுகளை பதிய முகாமைத்துவ நிலையம் அமைப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காக 'தேசிய தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையம்' ஒன்றை நிறுவியுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்காக இராஜகிரிய தேர்தல் செயலகத்தின் இரண்டாவது மாடியில் இந்த நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு கட்சி-குழு-வேட்பாளர் அல்லது எந்த நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளை இங்கு பதிவு செய்ய முடியும் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை தொலைபேசி- தொலைநகல்- வைபர் மற்றும் வட்ஸ்அப் மூலமாகவும், மின்னஞ்சல் மற்றும் முகநூல் மூலமாகவும் தெரிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இலக்கம் - 0112860056, 011 2860059, 011 2860069

தொலைநகல் இல. - 011 2860057, 011 2860062

வைபர்/வட்ஸ்அப் - 0719160000

மின்னஞ்சல் -electionedrgmail.com

முகப்புத்தகம்- Election Commission of Sri Lanka, Tell Commission - Election Commission of Sri Lanka.

# காற்சட்டை அணிந்து ஜனாதிபதி வீடு செல்வாரா, இல்லையா?

## இப்படியும் ஒரு கதை நாடாளுமன்றத்தில் ஒலித்தது

காற்சட்டையுடன் வீடு செல்வதா அல்லது மக்களிடம் சொல்லி காற்சட்டையைக் கழற்றுவித்த பின்னர் அதைத் தலையில் வைத்துக் கொண்டு வீடு செல்வதா என்பதை ஜனாதிபதி தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரகொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டுஉரையாற்றுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

இலங்கைஜனநாயகநாடுஎன்பதைஜனாதிபதி உட்பட அரசாங்கம் முதலில் தெரிந்துக் கொள்ள வேண்டும். 1931 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மக்களின் சர்வசன வாக்குரிமை பாதுகாகப்பட்டுள்ளது.

மக்களாணை சிறிதும் இல்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலவந்தமான முறையில்தேர்தலை நடத்துவதைப் பிற்போட முயற்சிக்கிறார்.

தேர்தல்செலவினத்தைஒழுங்குப்படுத்தல் சட்டம் சிறந்தது, ஆனால் அதனை நிறைவேற்றும் தருணம் இதுவல்ல, இந்த சட்டமூலத்தை ஆறு மாத காலத்துக்கு முன்னரே கொண்டு வந்திருக்க வேண்டும்,

நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டாலும், சபாநாயகரின் சான்றுரை கிடைக்கப்பெற்ற பின்னரே அது சட்டமாக நடைமுறைக்குவரும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் தீர்மானத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அந்தக் காலத்தில் அடிபணியவில்லை,

அதுபோல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்டளைகளுக்கு சபாநாயகர் அடிபணியக் கூடாது. சபாநாயகருக்கு மக்கள் மத்தியில் நல்லதொரு மதிப்பு உள்ளது. ஆகவே. சபாநாயகர் மக்களின் அபிலாகைளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகிறார். அவர் காற்சட்டையுடன் வீடு செல்வதா அல்லது, மக்களிடம் குறிப்பிட்டு காற்சட்டையை கழற்றி, காற்சட்டையைத் தலையில் வைத்துக் கொண்டு வீடு செல்வதா என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

மக்களின் அபிலாகைக்கு எதிராகத் தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விற்கு நேர்ந்த கதியே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் நேரிடும். – என்றார்.




## பொருளாதார நெருக்கடியால் 931 குழந்தைகள் வவுனியாவில் பாதிப்பு

பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா –செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 931குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட வினாவுக்கு பதில் வழங்கிய போதே அதில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் வெண்கலசெட்டிகுளம்பிரதேச செயலக பிரிவில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 6 ஆயிரத்து 465 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

அத்துடன் 931 குழந்தைகளும், 213 கர்ப்பிணிப் பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

## போலி மதுபான ஸ்டிக்கர்கள் குறித்து விசாரணை



மதுபான போத்தல்களில் போலி ஸ்டிக்கர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைசெய்யஉள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

போலியானஸ்டிக்கர்களை ஒட்டி மோசடியான முறையில் மதுபானபோத்தல்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

போலியாக மதுபானம் உற்பத்தி செய்யப்படுவதையும், வரி செலுத்துவதனை தவிர்க்காதிருக்கவும் இந்த ஸ்டிக்கர் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மேற்படி ஸ்டிக்கர்கள் போலியாக அச்சிடப்பட்டு ஒட்டப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் மதுவரித்திணைக்களஆணையாளர் நாயக அலுவலகம் தமக்கு அறிக்கை வழங்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பாரியளவில் போலி ஸ்டிக்கர்களுடன் மதுபானபோத்தல்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை தயாரிக்கப்பட்டு மதுவரித் திணைக்களம் நிதி அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளது.

இந்த அறிக்கை குற்றப் புலனாய்வு பிரிவிடம் வழங்கி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.




# தமிழ் காங்கிரஸ் கட்சி இன்று மூன்று சபைகளுக்கு வேட்புமனு

(இ.கலையமுதன்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை இன்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தது.

பருத்தித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கே வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இன்று மதியம் 1 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் சட்டத்தரணி ந.காண்டீபன் தலைமையிலான குழுவினர் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் தமது கட்சி போட்டியிடவுள்ளதாக சட்டத்தரணி ந.காண்டீபன்

தெரிவித்தார். அதில் இரண்டு சபைகளுக்கு இன்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாகவும் அவர் கூறினார.

# மருந்துகளின் விலை அதிகரிப்பால் அரச வைத்தியசாலைகள் நிரம்பின

தனியார் வைத்தியசாலைகளில் கட்டணம் மற்றும் மருந்துகளின் விலை அதிகரிப்பு காரணமாக அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களின் வருகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக வெளி நோயாளர் சிகிச்சை பிரிவுகள் மற்றும்கிளினிக்குகளுக்குவரும் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு காரணமாக சிரமத்திற்குள்ளாகும் நிலை காணப்படுவதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக வெளியில் இருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டியநிலைஏற்பட்டுள்ளதால் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபா!



முட்டையின் புதிய விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, வெள்ளை முட்டையின் அதிகபட்ச சில்லறைவிலை44ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவரால் இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# முல்லைதீவில் 4 சபைகளுக்கும் தமிழ் அரசு வேட்புமனு தாக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு சபைகளிற்கான வேட்பு மனுக்களை தமிழ் அரசுக் கட்சி இன்று தாக்கல் செய்தது.

கட்சியின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவரான மருத்துவர் மு.சிவமோகனால் தேர்தல்கள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு மற்றும் மாந்தை கிழக்கு ஆகியவற்றுடன் துணுக்காய் பிரதேசசபைக்கும் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 கட்சிகளும் இரண்டு சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



## தேசிய மக்கள் சக்தி யாழில் வேட்பு மனு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை தேசிய மக்கள் சக்தி நேற்று(வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 04 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையிலான குழுவினர் வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தனர்.

# மன்னாரில் 19 அணிகள் தேர்தலில் களம் குதிப்பு

### 16 கட்சிகள், 3 சுயேச்சைகள் கட்டுப்பணம் செலுத்தின

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ள நிலையில் மூன்று பிரதான கட்சிகள் நேற்று கட்டுப்பணத்தைசெலுத்தியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஆகியவை இணைந்து மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடு கின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நேற்று காலை மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமானகட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார். இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மன் னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கானகட்டுப்பணத்தை நேற்று செலுத் தியுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹீனைஸ் பாரூக் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஈ.பி.டி.பி கட்சி மன்னார் மாவட்டத்தில் 2 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகள் உள்ளடங்களாக 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. மன்னார் நகரசபைக்கு 10 கட்சிகளும், ஒரு சுயேச்சைக்குழு உள்ளடங்களாக 11 உம், மன்னார் பிரதேச சபைக்கு 8 கட்சிகளும், ஒரு சுயேச்சைக்குழு உள்ளடங்களாக 9 உம், நானாட்டான் பிரதேச சபைக்கு 12 கட்சிகளும், மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 9 கட்சிகளும், முசலி பிரதேச சபைக்கு 12 கட்சிகளும் ஒரு சுயேச்சைக்குழு உள்ளடங்களாக 13 உம் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட 16 கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் தொடக்கமே புதிய தேர்தல்கள் சட்டம்

### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் ஆரம்பமாகவே தேர்தல் செலவுகள் ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் காணப்படுகிறது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடும் வகையில் தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதில் உண்மையில்லை.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்தோம். தேர்தல் செலவினத்தைக் கட்டப்படுத்தும் வரைவைத் தயார்ப்படுத்த குறைந்தது இருமாத காலமேனும் தேவை என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. எனவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதனை நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டத்துக்கு அமையவே ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்படும்.

தேர்தல் தொடர்பில் ஆணைக்குழுவே முழுத் தீர்மானங்களையும் எடுக்க வேண்டும். அதன் செயற் பாடுகளில் ஆட்சியாளர்கள் தலையிட முடியாது– என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தும் சட்டம் பாதிப்பை ஏற்படுத்தாது என்ற இடைக்கால விதியைத்திருத்தமாகக்கொண்டு வர வேண்டும் என்றார்.

பதிலளித்த நீதியமைச்சர் தெரிவித்ததாவது: இலங்கையில் முறையற்ற தேர்தல் முறைமை அமுலில் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முறையற்ற தேர்தல் முறைமை முறையற்ற அரச நிர்வாகத்தைத் தோற்றுவிக்கும். முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கவின் படுகொலைக்கும் முறையற்ற தேர்தல் முறையே ஒரு காரணியாக அமைந்தது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தும் வகையில் தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தும் சட்டமூலம் கொண்டு வரப்படவில்லை.

நாட்டு மக்களுக்கு அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கை முழுமையாக சிதைவடைந்துள்ளது. சிறந்த அரசியல் கட்டமைப்பை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தேர்தல் செலவினம் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதித்தால்தான் முறையான அரச நிர்வாகக் கட்டமைப்பைத் தோற்றுவிக்க முடியும். தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டம் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளத்தயார். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

## குளியலறையில் மாணவி குழந்தை பெற்றெடுத்தார்

### பொலிஸார் விசாரணை

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் மாணவியொருவர் தனது வீட்டின் குளியலறையில் குழந்தை பிரசவித்தார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

குளியலறையில் இருந்து குழந்தை அழும் சத்தம் கேட்டு சிறுமியின் தாய் குளியலறையைத்திறந்துள்ளார். அங்கு தனது மகளுக்கு குழந்தை பிறந்துள்ளதைப் பார்த்து அதிர்ந்து போயிருக்கிறார்.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உள்ளூராட்சி தேர்தலில் அதிகளவு பொதுச் சொத்து துஸ்பிரயோகம்

### கண்காணிப்பு அமைப்புகள் கவலை

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஏற்கும் பணிகள் ஆரம்பித்த முதல் நாளில் இருந்து பொதுச் சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் இதுவரை 15 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கவலை தெரிவித்தன.

தேர்தல் காலத்தில் பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் இம்முறை கிடைக்கப்பெற்றுள்ளன என சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்க நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம், உள்ளூராட்சித் தேர்தலைப் பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல்

### பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் கம்பஹா மாவட்டத்துக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

தேர்தலை ஒத்திவைப்பதற்காக அல்ல தேர்தலை நடத்துவதற்காகவே வேட்புமனு கோரப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## அமெ. டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி, நேற்றைய தினத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள இன்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 371.39 ரூபாவாகவும், கொள்வனவு விலை 360.55 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், நேற்றுடன் ஒப்பிடும்போது ஸ்டெர்லிங் பவுண்டிற்கு எதிராக ரூபாவின் மதிப்பில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது, அதே நேரத்தில் யூரோவுக்கு எதிராக ரூபாவின் பெறுமதியிலும் வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் மதிப்பு தளம்பல் நிலையில் உள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 402.54 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 386.94 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டேலிங் பவுண்டின் இன்றைய விற்பனை பெறுமதி 459.41 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 442.57 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இனப்படுகொலைக்கு உடந்தையானவர்கள்




- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 245

மக்களின் நிரந்தர தீர்ப்பாயம், தமிழ் மக்களுக்கு நடத்தப்பட்டவற்றை இரண்டு பகுதிகளாக விசாரித்தது. இந்த விசாரணைக்கான மனுக்களை பதிந்தவர்கள் இலங்கையின் அமைதிக்கான அயர்லாந்து மன்றமும் (Irish Forum for Peace in Sri Lanka) ஜெர்மனியில் பிரேமன் நகரில் இயங்கிய அரசு சார்பற்ற அமைப்பும்.

இவர்களது மனுக்களில் இனப்படுகொலை நடந்தது எனவும் ஆராய்ந்து தீர்ப்பு தருமாறு கேட்கப்படவில்லை. இந்த அமைப்புகள் பிரதானமாக அந்த நாட்டினரையே அங்கத்தவர்களாக கொண்டிருந்தவை. அதாவது அது தமிழ் மக்களது புலம்பெயர் அமைப்பல்ல. அயர்லாந்தில் நடந்த விசாரணைகளின் பின் தீர்ப்பாயம் போர் குற்றங்களும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளும் ஸ்ரீலங்கா அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டன எனத் தீர்ப்பு வழங்கியது விசாரணைகளுக்கு வலு சேர்ப்பதற்காக இந்த அமைப்புகள் தமிழ்ப் புலம்பெயராளரை அணுகி சாட்சியங்கள் சேகரித்தும், அவர்களை நெறிப்படுத்துவதற்கும் உதவிகள் கோரிய போது இப்படியான நெறிப்படுத்தலில் பல சாட்சிகள் தங்களுக்கு நடந்தவை இனப்படுகொலை எனவும், மேலும் சமர்ப்பணங்கள் இவை கட்டமைக்கப்பட்டவை என்ற ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த சாட்சியங்களையும் சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த தீர்ப்பாயம், அவற்றைப் பற்றி தாங்களும் மேற்கொண்டு ஆராய்வதாகவும், மேலதிக சாட்சியங்களும் சேகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டால் மேற்கொண்ட விசாரணைகள் நடத்தலாம் என தனது தீர்ப்பில் கூறியது. அதனை அடுத்து தமிழ் தரப்புக்கள் இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள் Tamil Against Genocide என்ற புலம்பெயர் அமைப்பின் குடையின் கீழ் சாட்சியங்களும் சமர்ப்பணங்களும் சேர்ந்து தீர்ப்பாயம் மூன்று வருடங்களின் பின் ஜெர்மனியின் பிரேமன் நகரில் இரண்டாம் கட்ட விசாரணைகளை ஆரம்பித்துத் தீர்ப்பு வழங்கியது.




இனப்படுகொலை என்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் எனும் மனுக்கள் நியாயமானவையே, ஆனால் அதனிலும் சரியான அரசியல் வரைமுறை இருந்திருக்க வேண்டும், இந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு உதவிகள் தந்து கொண்டிருப்பவர்களுக்கும் சர்வதேச மனித உரிமை மன்றில் சமர்ப்பணங்கள் செய்பவர்களுக்கும் இடையே இணக்கப்பாடுகள் அமைந்திருக்க வேண்டும். தீர்ப்பாயத்தினால் பெறக்கூடிய தீர்ப்பின் பெருமையை எவ்வாறு முன்னேற்றுவது என்ற பாதைகள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லோரும் தான் எடுத்த பணிகளில் வெற்றி கொடி நாட்டி விட வேண்டும் என்று அர்ப்பணிப்புகள தந்தனரே ஒழிய, பொதுநோக்கில் நகரவில்லை. அப்படியான இணக்கங்கள் இருந்திருப்பின் தீர்ப்பாயத்தின் விசாரணைகளை வரையறுத்து, அவற்றை மேலும் பயனுள்ளவையாக மாற்றி இருக்கலாம். 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு, ஸ்ரீலங்கா இனப்படுகொலையை நடத்தியது என்பதோடு மட்டுமல்லாமல், அந்த இனப்படுகொலைக்கு அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா ஆகியன சேர்ந்து துணை போயின எனத் தீர்ப்பு வழங்க வேண்டும் எனக் கோரின. இந்த நாடுகளின் செயற்பாடுகளையும் விசாரணைக் உட்படுத்திய தீர்ப்பாயம் அந்த நாடுகளும் இனப்படுகொலைக்கு உடந்தையாகவிருந்தன எனத் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பு இனப்படுகொலைக்கு ஆதாரமான புறநிலை சான்றானாலும், ஐ.நாவின் கட்டமைப்புகளில் இந்த நாடுகள் இதனை எப்படி கணக்கெடுக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஐ.நாவிலோ அதன் கட்டமைப்புகளிலோ நடைபெறும் உள்ளக விவாதங்களில் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியாவும் இவற்றுக்கு அனுசரணையாக இயங்கும் நாடுகளும் இனப்படுகொலைக்கு இந்த நாடுகள் உடந்தையாக இருந்தன என்ற தீர்மானம் வளர்வதற்கு முட்டுக்கட்டை போடும். அது மாத்திரமல்ல உடந்தையானவர்கள் என்ற குற்றச்சாட்டு எழுவதற்கோ அல்லது நிரூபணமாவதற்கோ முதலில் இனப்படுகொலை நடந்தது என்பது தீர்மானமாக வேண்டும். ஆகவே இந்த நாடுகள் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற ஸ்ரீலங்காவின் அனுசரணை நாடுகளுடன் சேர்ந்து இனப்படுகொலை என்ற பச்சாதாப உணர்வுகள்' எழுவதை பயங்கரவாதத்துக்கு எதிரான போரென விவாதித்து, இனக்கொலை நடந்தது என்பதை நீர்த்துப் போக வைக்கிறார்கள்.

உடந்தையாக இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டு தீர்ப்பாயத்தின் தீர்ப்பின் இல்லாமல் இருந்திருந்தால் இனப்படுகொலை ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும் என்பதல்ல அர்த்தம். ஆனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இயங்கக் கூடியவர்களும் இப்படியான செயற்பாடுகளால் ஓரங்கட்டப்பட்டும் ஒதுக்கப்பட்டும் தங்களை பாதுகாத்துக் கொள்ள நிர்பந்திக்கப்படுகிறார்கள்.




தூரநோக்குப் பார்வை இல்லாமல், ஒன்று சேர்ந்து பொதுநோக்கில் இயங்காமல், அந்தந்த நேரம் அகப்பட்டவற்றை வசதியான பிரச்சாரங்களுக்காக எடுத்துரைத்துச் செயல்பட்டு, தங்களுக்கு வரக்கூடிய விளைவுகளைத் தான் தமிழ் தரப்புகள் பாதித்தன. பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை ஆட்சேபிக்கவில்லை, ஆனால் தாங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு வெளிப்படையான ஆதரவு தர முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜே.ஆருக்கு முறையிட, அவர் ஆதரவு தர வேண்டாம், ஆயினும் நாடாளுமன்றத்தில் எதிர்க்க வேண்டாம் என அறிவுறுத்த, அவர்கள் விவாதங்களிலும் வாக்களிப்பிலும் பங்குபற்றாது ஒதுங்கி இருந்ததும் திராணயற்ற கறைபடிந்த அரசியலாகவே வரலாறு எடுத்துக்காட்டுகிறது. இன்று வரை அந்த சட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் அழுகுரலையும் அவர்களில் சிலரை சிறையில் இருந்து விடுவிப்பது தீர்வுப் பேச்சுக்களில் இடம்பெறுவதும் இவற்றின் விளைவுகளை படம் பிடித்து காட்டுகின்றன.

அதுபோன்றே உப்புச் சப்பற்ற, திராணியற்ற வெளி காட்டலையோ விடுதலைப்புலிகளின் முதுகில் சவாரி செய்து நாடாளுமன்ற பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பினர்




பயங்கரவாதத்துக்கு எதிரான போர் தொடங்கப்பட்ட போதும் செய்தனர்.

விடுதலைப் புலிகளுக்கான புலம்பெயர் ஆதரவாளர்களும் அமைப்புகளும் வன்னிப் பரப்பில் புகலிடம் தேடும் மக்கள் யாவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவை நம்பி, சிங்கள இராணுவத்துக்கு பயந்து வெளியேறுகிறார்கள் என்று செய்த பிரச்சாரமும் உண்மையானாலும் சட்ட வாதங்களுக்காக வித்தியாசப்படுகின்றன.

அது போன்றதே அமெரிக்க, பிரித்தானிய, இந்திய இனப்படுகொலைகளுக்கு உடந்தையானவை எனக் கூறப்பட்ட தீர்ப்பாயத்தின் தீர்ப்பும்

இவை எவற்றையுமே மீளப் பெற்றுக் கொள்ள முடியாது. நீதிக்கான தமிழ் மக்களின் நீண்ட போராட்டங்களில் அவை உபாதைகளாக தொடர்ந்து கொண்டே இருக்கும். அவற்றை அனுசரித்து அணுகுமுறைகள் அமைக்கப்பட வேண்டும்.

(வளரும்)

## காணி, பொலிஸ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் எண்ணிக்கையை 10ஆக வரையறுப்பதற்கும் நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்பது மாகாணங்களுக்கும் தலா ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரும், கொழும்பு மெற்றோபொலிட்டன் பிரிவுக்கு ஒருவருமாக பத்து நியமனங்கள் வரையறுக்கப்படவுள்ளன. அதன் பின்னர் அவர்களை மாகாண நிருவாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் உறுதியளித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெள்ளிக்கிழமை திடீரென கூட்டமைப்பின் தலைவர்களுக்கு ஜனாதிபதி சந்திக்க விரும்புகின்றார் என்ற தகவல் தெரிவிக்கப் பட்டது. சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் சம்பந்தனும் சுமந்திரனும் மட்டுமே சந்திப்புக்குச் சென்றிருந்தனர்.

தமிழர் தரப்புடன் அரசு நடத்திவரும் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் அரசு வாக்குறுதியளித்த விடயங்களை நிறைவேற்ற கூட்டமைப்பு வழங்கிய ஒரு வார காலக்கெடு கடந்த 17ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனினும் வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை கொழும்பில் நேற்றுச் சந்தித்த தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதன் பின்னர் திடீரென தமிழ்த் தலைவர்களை அழைத்த ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளிக்கப்பட்ட விடயங்களில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா, பவித்ரா வன்னியாராச்சி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

சந்திப்பில், அரச நிறுவனங்களால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பில் முதலில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழான திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் குறித்து அவதானம் செலுத்தினோம். வன உயிரிகள், வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்திராவும் அங்கிருந்ததால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றோம்.

மாவட்ட ரீதியாக குறித்த திணைக்களங்கள் கையகப்படுத்தியுள்ள காணிகளின் விவரங்களை நாம் முன்வைத்தோம். அவற்றை மக்களிடம் மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் கூறினர்.

குறுக்கிட்ட சம்பந்தன் ஐயா, காணிகளை எப்போது விடுவிப்பீர்கள் என்கிற காலவரையறையைக் கூறுங்கள். அவ்வாறில்லாமல் விடுவிப்போம் விடுவிப்போம் என்று சொல்வதால் பயனில்லை என்றார் காட்டமாக.

அதுமட்டமன்றி, ஏற்கனவே ஐந்து அரசியல் கைதிகளை விடுவிப்பதாக கூறியபோதும் 108 ஏக்கர் காணிகளை விடுவிப்பதாக இணங்கியபோதும் இன்னமும் எந்த விடயமும் நடைபெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, விடுவிக்கப்படக்கூடிய காணிகளின் விவரங்களை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி அமைச்சரவை பத்திரமொன்றின் ஊடாக வெளிப்படுத்தி தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தொல்பொருளியல் துறையினரால் கையகப்படுத்தப்பட்டள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் அதிகாரிகளுடன் பேசப்பட்டது. குறிப்பாக குருந்தூர் மலையினைச் சுற்றியுள்ள காணிகளை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

குருந்தூர் மலை, தென்னமரவாடி, திரியாய் போன்ற இடங்களில் தாம் எல்லைக் கற்களை நாட்டியுள்ளபோதும் அவை வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர். அப்படியென்றால் திணைக்கள அதிகாரிகளே கற்களை உடன் அகற்றிவிட வேண்டும் என்று கோரினோம். அதற்கும் அரச தரப்பினர் இணங்கினார்கள்.

அதிகாரப்பகிர்வு விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்த உரையாடலின்போது, 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டோம். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது இந்த விடயத்தினை வலியுத்தியதையும் நாம் எடுத்துரைத்தோம்.

பதிலளித்த ஜனாதிபதி, தேசிய காணி ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். அது நிறைவடைந்தவுடன் காணி அதிகாரங்களை மாகணங்களுக்கு வழங்குவது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

அத்துடன் மாகாணங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் எண்ணிக்கையை 10ஆக வரையறுப்பதற்கு நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒன்பது மாகாணங்களுக்கும் தலா ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபரும், கொழும்பு மெற்றோபொலிக்கன் பிரிவுக்கு ஒருவருமாக பத்து நியமனங்களாக வரையறுக்கப் படவுள்ளன.

அதன் பின்னர் அவர்களை மாகாண நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றார்.

இதேநேரம், உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக் குதல், பயங்கரவாத தடைச்சட்டத்தினை மீளப்பெற்று புதிய சட்டத்தினை உருவாக்குதல் உள்ளிட்டவற்றுக்கான சட்ட வரைவுகள் தயராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்த வரைவுகளை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக எம்முடன் கலந்தாலோசிக்குமாறு எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக, ஏற்கனவே இணங்கிய விடயங்கள் மற்றும் இன்றைய சந்திப்பில் இணங்கிய விடயங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும், அதனடிப்படையிலேயே அடுத்த கட்டப் பேச்சுக்களை முன்னெடுப்பது பற்றிய தீர்மானங்களை எடுக்க முடியும் என்று அரச தரப்புக்கு தெரிவித்தோம் -என்றார்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2023 இல் வெளியிடப்பெற்றது.